ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2268/52 – 2022 පෙබරවාරි මස 23 වැනි බදාදා – 2022.02.23
2268/52 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/4/2021/LRB/211.
பி. செய. கு. இல. : ඉඅ/5/1/ 295.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்டுள்ள அட்டவணையின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர"
1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 22.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பாணந்துறை.

2. **காணியின் விபரம்**: மேல்மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், பணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 682, உடஹமுல்ல மற்றும் இல. 682B, எட்டம்பகொட, கிராம அலுவலர் பிரிவில், உடஹமுல்ல மற்றும் எட்டம்பகொட கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.12.13 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபட இலக்கம் KA/PAN/2021/492 இல் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

01. **துண்டு 'A' - கபுகே கும்புர, வெவ கும்புர, வெல்லபட கும்புர கஜுகஹவத்தை, ஆச்சாரியா கும்புர, பிட்டலெ கும்புர, வெவேகும்புர (கஜுகஹகும்புர, ஆச்சாரியா கும்புர அல்லது வெவே லியந்தி ஹதரே பதலே கும்புர) - விஸ்தீரணம்: சுமார் 1.7859 ஹெக்டயார்**

வடக்கு : சிரில் ஜேன்ஸ் மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 128/2A, 128/4, 121/7, 116/2, 116/4 மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி ; கிழக்கு : டைட்டஸ் குணதிலக்க

மாவத்தை ; தெற்கு : இந்த வரைபடத்தில் துண்டு B ; மேற்கு : சிரில் ஜேன்ஸ் மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 90, 88/5 மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி.

*02.* **துண்டு 'B' - காணியின் பெயர் குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம்: சுமார் 0.0876 ஹெக்டயார்**

வடக்கு : சிரில் ஜேன்ஸ் மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 90, 88/5 மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு A ; கிழக்கு : டைட்டஸ் குணதிலக்க மாவத்தை ; தெற்கு : இந்த வரைபடத்தில் துண்டு C ; மேற்கு : காணியின் பெயர் மற்றும் உரிமைகோருவோரை கண்டுபிடிக்க முடியாத காணி.

*03.* **துண்டு 'C' - கபுகே கும்புர, வெவ கும்புர, வெல்லபட கும்புர கஜுகஹவத்தை, ஆச்சாரியா கும்புர, பிட்டலெ கும்புர, வெவேகும்புர (கஜுகஹகும்புர, ஆச்சாரியா கும்புர அல்லது வெவே லியந்தி ஹதரே பதலே கும்புர) - விஸ்தீரணம்: சுமார் 2.0122 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தில் துண்டு B ; கிழக்கு : டைட்டஸ் குணதிலக்க மாவத்தை ; தெற்கு : டைட்டஸ் குணதிலக்க மாவத்தை மற்றும் டி சில்வா மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 25/4, 25/7, 25/5, 27 மற்றும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி; மேற்கு : காணியின் பெயர் மற்றும் உரிமைகோருவோரை கண்டுபிடிக்க முடியாத காணி.

EOG 02 - 0616

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை*

### 2022 ஆம் ஆண்டின் 71 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல.: 4-3/4/2021/LRB/233.
பிர. செய. குறி. இல.: ஒஅ/5/1/295.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்டுள்ள அட்டவணையில் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர"
1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 22.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்:** பிரதேச செயலாளர், பாணந்துறை.

**2. காணியின் விபரம்:-** மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 682, உடஹமுல்ல மற்றும் இல. 682B, எட்டம்பகொட கிராம அலுவலர் பிரிவில், உடஹமுல்ல மற்றும் எட்டம்பகொட கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.12.13 ஆந் திகதிய முதற் சுவட்டு இல. KA/PAN/2021/491 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' - வெவ இஹல கும்புர, கபுகே கும்புர, வெவ கும்புர, கஜூகஹகும்புர அல்லது லிஹினியாவல மற்றும் வெவே கும்புர கரதேருவ - விஸ்தீரணம் : சுமார் 2.4704 ஹெக்டயார்**

வடக்கு : டைட்டஸ் குணதிலக மாவத்தை, சிரில் ஜேன்ஸ் மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 182, 174/6, 174/8, 174/10, 156/1, 156/6 மற்றும் இன்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி மற்றும் அசோக மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 2/9 மற்றும் 15 ஐக் கொண்ட காணி ; கிழக்கு : அசோக மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 2/9 மற்றும் 15 ஐக் கொண்ட காணி, வீதி, சிறி ஜயநந்தனாராமய மற்றும் டி சில்வா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 115, 115/4 மற்றும் இன்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி ; தெற்கு : சிறி ஜயநந்தனாராமய மற்றும் டி சில்வா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 115, 115/4, 63/4A, 63/4, 63/5, 63/5A மற்றும் இன்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி ; மேற்கு : டி சில்வா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் 63/4A, 63/4, 63/5, 63/5A மற்றும் இன்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணி மற்றும் டைட்டஸ் குணதிலக்க மாவத்தை.

EOG 02 - 0617

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.